[16th July 1957

THE HON. SRI R. VENKATARAMAN : It is not sub judice, Sir. Recovery of money is pending.

SRI S. B. ADITYAN : எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பதை மந்திரி அவர்கள் அறிவிப்பாரா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பத்து லட்ச ரூபாய்.

SRI K. VINAYAKAM : Sir, are these shareholders who signed the indemnity bond to the Government for this sum of rupees ten lakhs, now residents of Madras State or does any of them belong to the Andhra State?

THE HON. SRI R. VENKATARAMAN : That would be sub judice, Sir. Any matter connected with recovery of money should be considered sub judice, either with regard to the persons or with regard to the amounts.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மில் குடியாத்தத்தில் இருக்கக் கூடியது அல்ல. காட்பாடியில் இருக்கக்கூடியது. இந்த மில்லுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கும் டைரக்டர்கள் அத்தனை பேரும் இந்த ராஜ்யத்தில் முன்னால் நிதி மந்திரியாக இருந்த ஸ்ரீ கோபால் ரெட்டியார் அவர்களுக்குச் சொந்தக்காரர்கள். மாமனார், ஒருவர் மாமியார்.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் இப்பொழுது தான் சொன்னார் : " இந்த விஷயம் கோர்ட்டில் இருக்கிறது, ஆளைக் குறித்துப் பேசக் கூடாது. பொதுவாக ஏதாவது கேள்விகள் கேட்கவேண்டுமென்றால் கேட்கலாம். " அதன்படி தான் அங்கத்தினர் கேள்விகள் கேட்க வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : இது போன்று கொடுத்து, அதை சுமார் பத்து வருஷ காலம் ஆகியும் கூட, வாங்காத காரணத்தினால், அந்த மில்லை நடத்த முடியாமல், அதில் உள்ள பல பொருள்கள் திருட்டுப் போனதற்குப் பிறகு, சமீபத்தில் 5 லட்சம் 40 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. அப்படியிருக்க மீண்டும் கேஸ் நடத்துவது எதற்காக ?

THE HON. SRI R. VENKATARAMAN : பணம் வசூல் செய்ய முடியாததினால் நம்முடைய " மார்ட்கேஜ் " ஐ வசூல் செய்வதற்காக அந்த மில்லை ஏலம் போட்டோம். முதல் ஏலம் 5 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கு எடுக்கப்பட்டது. அது போதாது, இன்னும் அதிக விலைக்குப்போகும், துண்டு துண்டாக ஏலம் போட்டால் சர்க்காருக்கு வேண்டிய பணம் கிடைத்துவிடும் என்று சொன்னதன்பேரில் மீண்டும் துண்டு துண்டாக ஏலம் போடப்பட்டது. துண்டு துண்டாக ஏலம் போட்டும், ரூ. 5,47,509 க்குத் தான் ஏலம் எடுக்கப்பட்டது. முதலில் ஏலம் எடுத்தவர், " இரண்டாவது ஏலம் செல்லாது " என்று கோர்ட்டில் தாவா போட்டிருக்கிறார். அது முடியும் வரையில் பணம் வருவது கஷ்டம்.

SRI K. VINAYAKAM : Sir, are the Government aware of the fact that this Mill did not work even for one single day and did not produce one pint of oil nor did they purchase the necessary machinery so as to make it a complete Mill ?

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, there is no use crying over spilt milk ?

SRI M. P. SARATHI : " சுதர்சன் ஆயில் மில் " ஐ சர்க்காரே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சியும், மாவட்டக் கழகமும், பொது ஜனங்களும் மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். இதை சர்க்கார் ஏதாவது கவனிக்குமா ?